# அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை – 600 006

**முன்னிலை :** கு.தேவராஜன், எம்.ஏ., எம்.எட்.,
இயக்குநர்

ந.க.எண். 033238/பி1/2013 நாள் : .08.2013

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6 – இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வு மார்ச்/ஏப்ரல் 2014 – பள்ளி மாணவர்களின் பெயர்பட்டியல் தயாரித்தல் தொடர்பான உறுதிமொழிபடிவம் (Declaration Form) பெற்றோர்களால் பூர்த்தி செய்தல் – அறிவுரைகள் – தொடர்பு.

------

**ஆணை :–**

நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2014, இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வெழுதும் பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்கு, முதற்கட்டமாக சில கூடுதல் விவரங்கள் உள்ளடக்கிய புதிய உறுதிமொழிப்படிவம் (Declaration form) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பெயர்ப்பட்டியலே (Nominal Roll) மாணாக்கரின் பிழையில்லாத மதிப்பெண் சான்றிதழ் வழங்குவதற்கான மூல ஆவணம் என்பதால், மாணாக்கரிடமிருந்து பெறப்படும் பூர்த்தி செய்யப்பட்ட உறுதி மொழிப் படிவத்தில் எந்தவித தவறுகளும் ஏற்படக்கூடாது.

இப்பணியினை 26.08.2013 அன்று தொடங்கி 07.09.2013–க்குள் நிறைவு செய்தல் வேண்டும்.

இதன்பொருட்டு, மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் பிற்பகல் மணி 4.00 முதல் 5.00க்குள் மாணாக்கரின் பெற்றோரை பள்ளிக்கு வரவழைத்து, உறுதிமொழிப் படிவங்களைப் பூர்த்தி செய்து பள்ளி மாணாக்கரின் கையெழுத்தினையும், பெற்றோரின் கையெழுத்தினையும் பெறுதல் வேண்டும். பெற்றோர்கள் உறுதிமொழிப்படிவத்தில் பிறந்த தேதியினைப் பூர்த்தி செய்வதற்கு முன்பாக, பிறப்புச் சான்றினை சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் இருந்து பெற்று வைத்துக் கொள்ள வேண்டும். பிறப்புச் சான்றின் அடிப்படையிலேயே பிறந்த தேதி அமைய வேண்டும். அவ்வாறு பிறப்புச் சான்றிதழ் பெற இயலாதவர்கள், அவர்கள் அளிக்கும் உறுதிமொழி ஆவணத்தின் அடிப்படையில், பிறந்த தேதியினைப் பதிவு செய்ய வேண்டும்.

..2..

ஆனால், பின்னர் அதில் ஏதேனும் தவறு இருப்பது கண்டறியப்பட்டால், மாணவர், உயர்கல்வி மேற்கொள்வதற்கு, அல்லது வெளிநாடு செல்வதற்கு சிக்கல்கள் ஏற்படும் என்பதைப் பெற்றோர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். உறுதிமொழிப் படிவத்தில் பூர்த்தி செய்த விவரங்கள் சரியானவை என பெற்றோரால் உறுதி செய்யப்பட வேண்டுமெனவும், அதில் தவறுகள் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட மாணவரின் மதிப்பெண் சான்றிதழிலும் அதே தவறுகள் ஏற்படும் எனவும், அதன் காரணமாக மாணாக்கரின் எதிர்காலம் பாதிக்கப்படுவதோடு மதிப்பெண் சான்றிதழில் திருத்தங்கள் மேற்கொள்ள தேவையற்ற அலைச்சலும் பண விரயமும் ஏற்படும் எனவும் பெற்றோர்களுக்கு தலைமையாசிரியர்கள் அறிவுறுத்த வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

ஒவ்வொரு மாணவரின் உறுதிமொழிப் படிவத்திலும், சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியரும், பள்ளித் தலைமையாசிரியரும் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என்பதனை ஒருமுறைக்கு இருமுறை உறுதி செய்துகொண்டு உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிட வேண்டும். பெயர்ப்பட்டியலும் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்களும், உறுதிமொழிப் படிவங்களின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுவதால் இப்பணியை தலைமையாசிரியர் தனது நேரடி கவனத்தில் மிகுந்த பொறுப்புடனும் கவனத்துடனும் ஆற்ற வேண்டும். இதன் பின்னர் எவ்விதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனை மனதில் கொள்ள வேண்டும். இதற்கு பின்னரும் மாணாக்கரின் விவரங்களில் தவறுகள் ஏதும் நேரிடின் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரே முழுப் பொறுப்பு ஏற்க நேரிடும் என்பதுடன் தலைமையாசிரியர் மீது துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உறுதிமொழிப் படிவங்களின் அடிப்படையில் மார்ச் / ஏப்ரல் 2014 இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ்பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை ஆன்லைனில் பதிவு செய்யத் தேவையான இணையதள முகவரி, User ID, Password ஆகிய விவரங்கள் மற்றும் கால அவகாசம் இம்மாத இறுதிக்குள் தெரிவிக்கப்படும். எனவே, உறுதிமொழிப் படிவங்களை ஒவ்வொரு பள்ளியும் 07.09.2013–க்குள் பெற்று தயார் நிலையில் வைத்திருக்க தெரிவிக்கப்படுகிறது.

...3...

## <u>புதிய உறுதிமொழிப் படிவத்தில் விவரங்களைப் பூர்த்தி செய்தல் தொடர்பான அறிவுரைகள்</u>

**1. மாணவரின் பெயர்:** மாணவரின் பெயரைப் பதிவு செய்ய 34 எழுத்துக்கள் எழுதும் வகையில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பெயரை முதல் கட்டத்திலிருந்து தொடங்கி தொடர்ச்சியாக எழுத வேண்டும். அதனைத் தொடர்ந்து தலைப்பெழுத்து இடம்பெற வேண்டும். பெயருக்கும் தலைப்பெழுத்துக்கும் இடையில் (Between name and initial) ஒரு இலக்க இடைவெளி மட்டுமே இருத்தல் வேண்டும். இரு தலைப்பெழுத்துக்கள் இருப்பின் இரு தலைப்பெழுத்துக்களுக்குமிடையே ஒரு இலக்க இடைவெளி மட்டுமே இருத்தல் வேண்டும்.

**<u>ஆன்லைனில் எவ்வாறு பதிவு செய்வது ?</u>**

**<u>தவறான பதிவு</u>**

MANI..................................K
RAJENDRAN .....................R
NARAYANAMOORTHY......MS
M..A..N..I.............................K

✗

அதாவது அனைவரின் தலைப்பெழுத்தும் ஒரே நேராக இருக்கும் வகையில் பதிவு செய்யக் கூடாது. இது தவறு. மேற்படி பெயர்களை கீழே குறிப்பிட்டுள்ளவாறுதான் பதிவு செய்ய வேண்டும்.

**<u>சரியான பதிவு</u>**

MANI R
RAJENDRAN R
NARAYANAMOORTHY M S

✓

பெயர் இருபகுதிகளாக இருப்பின், இரு பகுதிகளுக்குமிடையே ஒரு இலக்க இடைவெளி மட்டுமே விடவேண்டும்.

**2. பிறந்த தேதி:**

Passport மற்றும் visa-விற்கு விண்ணப்பிக்கும்போது மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களில் உள்ள பிறந்த தேதிக்கும் அவர்களின் பிறப்புச் சான்றிதழில் (Birth certificate) உள்ள தேதிக்கும் முரண்பாடு இருப்பதாகத் தெரிவித்து, அதிகப்படியான மாணவர்கள் மதிப்பெண் சான்றிதழில் உள்ள பிறந்த தேதியை மாற்றித் தர தேர்வுத் துறையினை நாடுகின்றனர்.

எனவே, இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வினைப் பொறுத்தவரை, மாணவரின் பிறந்த தேதியினை பிறப்புச் சான்றிதழுடன் ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே பதிய வேண்டும். (அவ்வாறு பிறப்புச்சான்றிதழ் பெற இயலாதவர்கள் அவர்கள் அளிக்கும் உறுதி மொழி ஆவணத்தின் அடிப்படையில் பிறந்த தேதியினை பதிவு செய்ய வேண்டும்) பள்ளி ஆவணங்களில் வேறு தேதி பதியப்பட்டிருப்பின், பிறப்புச் சான்றிதழிலுள்ள தேதியையே தற்போது உறுதிமொழிச் சான்றிதழிலும் (Declaration Form) பதிந்து பள்ளி ஆவணங்களிலும் உரிய திருத்தம் மேற்கொள்ள வேண்டும்.

**3. பாலினம்:** ஆண் (M) / பெண் (F) என்பதனை உரிய கட்டத்தில் (√) குறியிட வேண்டும்.

**4. வகைப்பாடு :** படிவத்தில் குறிப்பிட்டுள்ள உரிய கட்டத்தினை சாதி சான்றிதழின் அடிப்படையில் (√) குறியிட வேண்டும்.

**5. மதம் :** உரிய மதத்தினை (√) குறியிட வேண்டும்.

**6. (a) மாற்றுத் திறனாளி :** அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வித் (வி1)துறை, நாள். 10.02.2010–ல் குறிப்பிட்டுள்ள குறைபாடுகளில் தேர்வருக்கு உள்ள குறைபாட்டினை உரிய கட்டத்தில் (√) குறியிட வேண்டும்.

(b) **தேசிய அடையாள அட்டை எண்:** மாற்றுத் திறனாளி தேர்வருக்கு வழங்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் எண்ணைக் குறிப்பிட வேண்டும்.

(c) **இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வு :** அறிவியல் செய்முறை தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கு கோருகிறாரா இல்லையா என்பதை (√) குறியிட வேண்டும்.

7.(a) **தந்தை / பாதுகாவலரின் பெயர்:** மாணவ / மாணவியரின் தந்தை அல்லது பாதுகாவலரின் பெயரை எழுத வேண்டும்.

**(b) தாய் / பாதுகாவலரின் பெயர் :** மாணவ / மாணவியரின் தாய் அல்லது பாதுகாவலரின் பெயதை எழுத வேண்டும்.

8. (a) **ஆதார் அடையாள அட்டை எண்:** மாணவர் ஆதார் அட்டை பெற்றிருந்தால் அதன் எண்ணைக் குறிப்பிடப்பட வேண்டும்.

(b) **குடும்ப அட்டை எண்:** குடும்ப அட்டை எண் ( Ration Card No.) குறிப்பிட வேண்டும்.

**9. கைபேசி எண்:** தேர்வருக்கு கைபேசி இருப்பின் அந்த எண்ணோ அல்லது பெற்றோர் / பாதுகாவலரின் கைபேசி எண்ணோ குறிப்பிடப்படலாம். இந்தப்பகுதி தேர்வரின் விருப்பத்திற்கு உட்பட்டது.

**10. இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வு** உறுதிமொழிப் படிவத்தில் வரிசை எண்.10–ல்

பகுதி I–ல் மொழிப்பாடம் குறிப்பிடப்பட வேண்டும்.

பகுதி II–ல் ஆங்கிலம் எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

பகுதி III–ல் கணிதம், அறிவியல், சமூக அறிவியல் பாடங்களுக்குப் பயிற்று மொழியினைக் (Medium of Instruction) குறிப்பிட வேண்டும்.

மொழிப்பாடத்தில் (பகுதி I (அ) II) விலக்கு கோருவோருக்கு XXX எனக் குறிப்பிட வேண்டும்.

தேர்வரின் அண்மையில் எடுக்கப்பட்ட Stamp Size புகைப்படத்தினை உறுதிமொழிப் படிவத்தின் வலது மேல் புறத்தில் ஒட்டப்படவேண்டும்.

உறுதி மொழிப் படிவத்தில் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து விவரங்களையும் சரி பார்த்து உறுதி செய்தபின்னர், உறுதி மொழிப் படிவத்தில் தேர்வர், பெற்றோர், வகுப்பாசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர் கையொப்பமிட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகள் அனைத்தும் உறுதிமொழிப் படிவம் பூர்த்தி செய்வதற்கு மட்டுமே. பெயர்ப்பட்டியலை ஆன்–லைன் மூலம் இணையதளத்தில் பதிவேற்றம் (uploading) செய்வது தொடர்பான அறிவுரைகள் விரைவில் தனியே தெரிவிக்கப்படும்.

**இயக்குநர்**

இணைப்பு : உறுதிமொழிப் படிவம்

பெறுநர்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மெட்ரிக் / ஆங்கிலோ இந்திய பள்ளி ஆய்வாளர்கள்
3. இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி.

நகல் :

1. அனைத்து அரசுத் தேர்வுகள் மண்டலத்துணை இயக்குநர்கள்
2. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

– தக்க நடவடிக்கைக்காக